Koviloor Digital Library

ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

"நம்பெருமாளும் நம்மாழ்வாரும்"

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி K. வரதாசார்யர் ஸ்வாமி
15, தம்புசெட்டித் தெரு, சென்னை-1

திருவரங்கம் பெரிய கோயில் பெருமைக்குத் தக்க பெரிய கோபுரம் உருவாகியுள்ளது. மஹா கோபுர மஹா ஸம்ப்ரோக்ஷணத்தையொட்டி வெளியிடப்படும் மலரில் அடியேனுக்கும் பங்கேற்க வாய்ப்பு தேவஸ்தாந அதிகாரிகள் மூலமாகக் கிடைத்துளது. திருவரங்கன் திருவாணையென சிரமேற்கொண்டு தேவஸ்தாநத்தார் கொடுத்த தலைப்பினைச் சற்று விவரித்து எழுதுகிறேன்.

திருவரங்கமே பெரிய கோயில் — ஆங்கே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திவ்ய தம்பதிகள் பெரிய பெருமாளும் பெரிய பிராட்டியாரும் ஆவர். மண்டபம் பெரிய திருமண்டபம்-திருநாள் பெரிய திருநாள் - திருவரங்கனுக்கு மாமனர் பெரியாழ்வார் - ப்ரதமாசார்யனை திருவரங்கனுக்கே ஆசார்யனக அமைந்தவர் பெரிய ஜீயர். இவ்வளவு பெருமை வாய்ந்த திருவரங்கனுக்குப் பெரிய ராஜகோபுரம் அமைவது சாலப் பொருத்தமே.

இத்திருவரங்கனைக் காணுத கண்கள் கண்ணல்ல - பாடாத நா நாவல்ல - நினையாத நெஞ்சு நெஞ்சன்று - ஆழ்வார்களும் பூர்வாசார்யர்களும் மண்டிக் கிடந்த திவ்யதேசம் திருவரங்கம். அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கமிறே.

அர்ச்சாவதார தெய்வங்களுள் தலையானவர் நம்பெருமாள் - ஆழ்வார்களுள் தலையானவர் நம்மாழ்வார்.

நம்மாழ்வாருக்கும் நம்பெருமாளுக்கும் உள்ள ஸம்பந்தத்தை யநுபவிப்பிக்கும் கட்டுரையே இது. ஈண்டு விவரிக்கிறேன்.

" நம்பெருமாள் நம்மாழ்வார் " என்ற இச்சொற்றொடர் உபதேச ரத்தின மாலையில் மணவாள மாமுனிகள் திருவாக்காக அமைந்துளது.

" நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால் — அன்புடையோர்
சாற்று திருநாமங்கள்தான் என்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லி நீயின்று "

என்பது அப்பாசுரம்

அன்புடையோர் சாத்துகையாவது-"இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலிலே காணலாம் " என்று பிள்ளை லோகாசார்யர் சாத்தின திருநாமமிறே இது. மேலும் பெருமாள் திருவடிகளுக்குப்போர நல்லராயிருக்கிற ராஜகண்ட கோபாலரென்கிற விண்ணப்பம் செய்வார் ஒருவர் ஒரு கால விசேஷத்திலே " நம்பெருமாள் " என்று அபிமாநித்தார் என்றும், " ஆயிஆழ்வார் பிள்ளை "யும் " நம்பெருமாள் " என்று நிச்சயித்து மேலெழுத்திட்டு அருளினர் என்றும் கூறுவர். " ஸ்ரீரங்கநாத மமநாத " என்று எம்பெருமானரும், " அரங்கமாளி என்னுளி " என்று கலியனும், " என்னரங்கத்தின்னமுதர் குழலழகர் " என்று ஆண்டாளும், " என்னுடைய திருவரங்கர் " என்று பெரியாழ்வாரும் அநுபவித்த பெருமாளிறே நம்பெருமாள்.

நம்பெருமாளாலே நம்மாழ்வார் என்று அபிமாநிக்கப்பட்ட ஆழ்வார் காரிமாறன் சடகோபன். அல்லாத ஆழ்வார்களிற் காட்டிலும்

Koviloor Digital Library

ஆழ்வாரை ''நம்மாழ்வார்'' என்று அபிமாநித்தருளி, பெரிய திருவத்யயநத்துக்கும் அப்படியே திருமுகம் எழுதித் திருநகரிக்குப் போகவிட்டருளுவர் என்றும் உண்டிறே. '' நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய ஆதரத்தால் கேட்ப" என்றிறே கவிச்சக்ரவர்த்தியான கம்பனுடைய வாக்கு. '' ந: குலபதே: வகுளாபிராமம்" என்றிறே பரமாசார்யரான ஆளவந்தாரும் அருளிச்செய்தார். இப்படிப்பட்ட வைபவசாலிகளான நம்பெருமாள் நம்மாழ்வார் இருவருடைய பரிமாற்றத்தையும் இனி நாம் அனுபவிப்போம்.

'' நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்பர்" என்ற பாட்டிலே '' என்பர்'' என்று வினைச்சொல் உள்ளது. அதற்கு கர்த்ருவாசகபதம் '' அன்புடையோர்'' என்று கூறலாம் அன்புடையோர் " நம்பெருமாள் நம்மாழ்வார்'' என்பர் என்று அன்வயம் - அங்ஙனன்றிக்கே '' நம்பெருமாள்'' என்ற பதமே கர்த்ருவாசகம் என்றும் கொள்வர் – '' நம்பெருமாள் என்பர்'' என்று அன்வயம். அவர் கூறும் வார்த்தை '' நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை'' என்னும் பதங்கள் - நம்பெருமாள் அநவரதம் வாய்வெருவும் பதங்கள். '' நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை'' என்னும் பதங்கள் என்றபடி.

ஸாம வேத ஸாரமாயும் சாந்தோக்ய ஸமமாயும் நம்பெருமாள் புகழ் கூறுமதான திருவாய்மொழியை நம்மாழ்வார் பாடியவர் – அதற்கு அநதிவிஸ்தரமான ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானத்தை யருளிச் செய்தவர் பரமவேதாந்தியான நஞ்ஜீயர் அதற்கு விவரணமாக முப்பத்தாறாயிரப்படி என்ற விபுல வ்யாக்யாநத்தை உபந்யஸித்தருளியவர் நம்பிள்ளை என்னும் நம்பூர் வரதாசார்ய ஸ்வாமி – ஆகையாலிறே இவர்கள் திருநாமங்களை நம்பெருமாள் வாய்வெருவுகிறார் – திருவாய்மொழி திருவரங்கனைப் பற்றியது என்பதனைப் பரமாசார்யரான ஸ்ரீ பராசரபட்டர் '' வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதற்றாய் சடகோபன்'' என்று அருளிச் செய்தார் – ''சேராதன உளவோ பெருஞ்செல்வர்க்கு, வேதம் செப்பும் பேராயிரம் திண்பெரும் புயமாயிரம் பெய்துளவத்தாரார் முடியாயிரம் குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆராவமுதக் கவியாயிரம் அவ்வரியினுக்கே'' என்ற கம்பர் பாசுரத்தையும் ப்ரமாணமாகக் கொள்ளலாம். '' முகில் வண்ணனடிமேல் சொன்ன சொல்மாலை ஆயிரம்'' என்றாரிறே ஆழ்வார். அரவணைமேல் பள்ளிகொண்ட அணியரங்கனிறே முகில்வண்ணன்.

வேதம் முதலான சாஸ்த்ரங்களைச் சிறந்த ப்ரமாணமாகக் கொண்டவர்கள் வைதிகர்கள். அவர்கள் மதம் வைதிகமதம். அவற்றிலே தலைசிறந்த வைதிகமதம் நம்மிராமாநுசமதம். தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத்தான் '' எம்பெருமானார் தரிசனம் '' என்று இம்மதத்திற்கு நாமகரணம் செய்தருளினான். அதற்குக் காரணம் '' எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார். அம்புவியோர் இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச்செயல் அறிகைக்கா'' என்கிறபடியே ஸ்ரீராமாநுசன் இந்த மதத்தை மிக மிக நன்றாக வளர்த்தமையேயாகும். '' த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை: இதம் அகிலதம: கர்சநம் தர்சநம் ந'' என்று ஸ்வாமி தேசிகனும் அருளிச் செய்தருளினாரிறே – இந்த விசிஷ்டாத்வைத தர்சநம் அநாதி வேதாந்த ஸித்தாந்தமாகும். மஹர்ஷிகளாலும் ஆழ்வார்களாலும் ஆசார்யர்களாலும் தத்தத் காலத்திலே வளர்க்கப்பட்டதேயன்றி உண்டாக்கப்பட்டதன்று - மேலும் இம்மதமே வேதாந்த வாக்யங்களுக்கும் ப்ரஹ்மமீமாம்ஸா ஸூத்ரங்களுக்கும் கீதா வசனங்களுக்கும் பொருந்தியதாகும். இஃது ஸர்வ ஸமஞ்ஜஸ மதமாகும். இந்த மத ஸாரார்த்தங்களை ஸ்ரீ வேதவ்யாஸர் ப்ரஹ்ம ஸூத்ரங்களாலும் நம்மாழ்வார் திருவாய்மொழியாலும் விவரித்து அருளிச் செய்தார்கள் – ப்ரஹ்ம ஸூத்ர க்ரந்தத்தை ஸ்ரீபாஷ்யகாரர் '' பாராசர்ய வசஸ்ஸுதா'' என்றும், திருவாய்மொழியை ஸ்ரீமந்நாதமுநிகள் ''பக்தாம்ருதம்'' என்றும் கொண்டாடியுள்ளார்கள். சரீர க்ஷேமார்த்தமான அமுதத்தை வங்கக் கடல் கடைந்து எடுத்தீந்தான் தேவர்களுக்கு பகவான். வ்யாஸரும் ஸ்ரீபராங்குசனும் வேதாந்தங்களைக் கடைந்து அமுதமான சாரீரகத்தையும் திருவாய்மொழியையும் எடுத்து ஸ்ரீவைஷ்ணவர்க்கு ஈந்தார்கள். '' பாராசர்ய வச: ஸுதாம் உபநிஷத் துக்தாப்திமத்யோத்த்ருதாம்'' என்று ஸ்ரீராமாநுசன் திருவாக்கு. '' மறைப் பாற்கடலைத்

Koviloor Digital Library

திருநாவின் மந்தரத்தால் கடைந்து, துறைப் பாற்படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தம் கறைப்பாம்பணைப்பள்ளியான் அன்பர் ஈட்டம் களித்தருந்த நிறைப்பான்'' என்று திவ்ய கவி பிள்ளைப் பெருமாளய்யங்கார் பாசுரம்.

''எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன் றமிழால் செய்தற்குலகில் வரும் சடகோபன்'' என்கிறபடியே வேதம் தமிழ்செய்தார் மாறன். திருவாய்மொழி திருவரங்கன் புகழ் பாடுமது – பரம வேதாந்த ஸாரார்த்த கர்ப்பிதம்.

திருவாய்மொழியில் கூறப்படும் வேதாந் தார்த்தங்களையும் அவை திருவரங்கனுக்குப் பொருந்தியுள்ள வகையையும் கூறுகிறேன் ''ஸர்வோபநிஷத: காவ: தோக்தா கோபால நந்தந:..... ...துக்தம் கீதாம்ருதம் மஹத்'' என்கிறபடியே வேதாந்த ஸாரமிறே கீதா சாஸ்த்ரம் கீதையே சாஸ்த்ரம் - பதினெட்டாம் அத்யாயம் ஸாரோத்தாரமாக அமைந்தது – அது தன்னிலும் ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்ற சரம ச்லோகமே பரம ஸாரமானது - இது தன்னை நம்மாழ்வார் ''வார்த்தை'' (7. 5 10) என்றருளிச்செய்தார். ஆண்டாள் ''திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மைப் பெருவார்த்தை'' என்றருளிச் செய்தாள். சரணாகதி விதாயக வசநமிறே இது கீதாசார்யன் கீதையில் சரணாகதியை விதித்தான். ஆகையால் கீதை விதிவாக்யமாகிறது. திருவாய்மொழி விதாயக வாக்யமாயும் அநுஷ்டாந வாக்யமாயும் அமைந் துள்ளது அதில் ''ஸித்த தர்ம விதி இதில் வித்யநுஷ்டாநங்கள்'' என்று ஆசார்யஹ்ருதயம் கூறுகிறது. ஸ்ரீகீதையில் ''மாமேகம் சரணம் வ்ரஜ'' என்று ஸித்த தர்ம விதிமாத்ரமே யுள்ளது. திருவாய்மொழியில் ''திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ'' என்று விதியும், ''உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்று அநுஷ்டானமும் இரண்டும் காணலாமிறே. ப்ரபந்நஜந கூடஸ் தரான நம்மாழ்வார் திருவாய்மொழியில் முமுக்ஷுவான சேதநன் அவச்யம் அறிய வேண்டிய அர்த்தபஞ்சகத்தையும் பரமவிசத மாக உபதேசித்தாரிறே – அவர்தாமும் சரண் யனைச் சரணம்பற்றி, திருமால் திருவருளால் அவாவற்று விடுபெற்றவரிறே -

வேதசதுஷ்டயஸாரமாக ப்ரபந்த சதுஷ் டயம் அருளிச்செய்தார் நம்மாழ்வார்.

ப்ரபந்த சதுஷ்டய ஸாரமான திருவாய் மொழியில திருவரங்கனை ஆழ்வார் அநு பவித்த ப்ரகாரத்தை இனி நாமநுபவிப்போம்.

கீதாசரம ச்லோகத்தில் பூர்வார்த்தம் அதி காரிக்ருத்யத்தையும் உத்தரார்த்தம் உபாய க்ருத்யத்தையும் கூறுகிறது – ''மாசுச:'' என்று அதிகாரி க்ருத்யசேஷத்தைக் கூறுகிறது என்பர் நம் பெரியோர். அதிகாரிக்ருத்யம் சரணாகதி– உபாயக்ருத்யம் அநிஷ்டநிவ்ருத்தி பூர்வக இஷ்டப்ராபணம் சரணாகதி சேதநக்ருத்யம் ரக்ஷணம் பரமசேதநக்ருத்யம் சரணாகதி தர்மம் ''ஸத்யாதிவத் வ்யாபிநீ'' என்கிறபடியே ஸர்வாதிகாரமான தர்மம். எவனும் சரணாகதி செய்யலாம். ஆயினும் எவனிடத்திலும் சரணா கதி செய்வது தகாது - சரணாகதிக்கு தேச கால ப்ரகார பலாதிகாரி நியமமின்றிக்கே யொழிந் தாலும் விஷய நியமம் உள்ளது பரத்வ ஸௌலப்ய பூர்ணனான பகவானே சரணா கதிக்கு நியத விஷயம் - ஸௌலப்யம் ஆச்ரயண ஸௌகர்யாபாதக குணமாகும்-பரத்வம் ஆச்ரித கார்யாபாதகமாகும் - இவையிரண்டுமிறே சரம ச்லோகத்தில் ''மாம்'' என்றும், ''அஹம்'' என்றும் கூறப்பட்டவை – கீதை நான்காம் அத்யாயத்தில் கூறப்பட்ட ஸௌலப்யமான எளிமையை ''மாம்'' என்றும், கீதை பதி னைந்தாம் அத்யாயத்திலே கூறப்பட்ட புரு ஷோத்தமத்வமாகிற பரத்வத்தை ''அஹம்'' என்றும் கீதாசார்யன் கீதா சரம ச்லோகத்தில் அருளிச் செய்தானிறே. அவன் ஸுலபனன் றாகில நாம் ஆச்ரயிக்கவியலாது - அவன் பரன் அன்றாகில் நம் கார்யம் அவன் செய்ய வியலாது – ''ஸ்வதந்த்ரஸ்யாபி நைவ ஸ்யாத் ஆச்ரயோ துர்லபஸ்ய து அஸ்வதந்த்ராத் பலம் ந ஸ்யாத் ஸுலபாத் ஆச்ரிதாதபி'' என்று தேசிகனும் அருளிச்செய்தருளினாரிறே ஆண் டாளும் திருப்பாவையிலே ''மாலே'' என்று ஸௌலப்யத்தையும், ''ஆலினிலையாய்'' என்று பரத்வத்தையும் அருளிச் செய்தருளி னாள். அது ''மா''மின் அர்த்தம், இது ''அஹ''மின் அர்த்தம் என்று நம்பூர்வர்கள் அநுபவித்தார்கள் ஸ்ரீமந் நாராயணனே பர தத்வமென்றும் அவனே ஸர்வலோக சரண்யன் என்றும் பகவத் கைங்கர்யமே பரம புருஷார்த்த மென்றுமிறே வேதாந்த ஸாரம் – இவற்றை யிறே கீதா மார்க்கத்தே நின்று திருவாய்மொழி யிலே யருளிச் செய்தார் நம்மாழ்வார். இவ் விஷயத்தை விளக்குகிறேன்.

Koviloor Digital Library

" அருள் கொண்டாடும் அடியவர் இன்புற அருளினான் அவ்வருமறையின் பொருள். அருள்கொண்டு ஆயிரமின்றமிழ் பாடினான்" - பரம வேதாந்தார்த்தங்களை கீதாசார்யன் கீதையில் வெளியிட்டான் அவன் அருள் கொண்டு திருவாய்மொழி பாடினார் நம்மாழ்வார் என்று வ்யாக்யாநமிட்டருளினார் இப் பாசுரத்துக்கு நஞ்ஜீயர். திருவாய்மொழிக்கு மூலம் கீதையாகும். " அவனுரைத்த மார்க்கத்தே நின்று " என்று ஆசார்ய ஹ்ருதயஸ் ஸ்ந்நம் " வாச்யன் பத்தினாய தோற்றம் போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப்பத்தான வீதின் ஆவிர் பாவம் " என்கிற ஆசார்ய ஹ்ருதய ஸூக்திப்படியே, வாச்ய வாசகங்களுக்கு ஸாம்யம் உளது - வாச்யனான பகவானுக்கு பத்து அவதாரங்கள் போலே வாசகமான இதற்கும் பத்தவதாரங்கள் திருவாய்மொழி பத்துப் பத்துக்கள் – பத்துப் பத்துக்களில் ஆழ்வார் அநுபவித்த பகவத் கல்யாண குணங்கள் பத்து. அவையாவன:- பரத்வம், காரணத்வம், வ்யாபகத்வம், நியந்த்ருத்வம், காருணிகத்வம், சரண்யத்வம், சக்தத்வம், பூர்ணத்வம் (ஸத்ய காமத்வம்), ஆபத்ஸகத்வம், ஆர்த்திஹரத்வம் என்பன.

ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாளைச் சரணம் பற்றுமிடத்து " ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மனே" என்றான் – ஸர்வலோக சரண்யன் என்று கூறி " ராகவாய " என்று எளிமையையும், " மஹாத்மனே " என்று மேன்மையையும் கூறினன் அவன் - ஆழ்வார் அதுதன்னை மாற்றி யருளிச்செய்தார். திருவாய்மொழி முதற்பத்தாலே பரத்வத்தைக் கூறி பரத்வ ஸ்த்தாபகமான காரணத்வத்தை இரண்டாம் பத்தாலே கூறி, காரணத்வ சங்கிததோஷ வ்யாவ்ருத்யர்த்தமாக வ்யாபகத்வத்தை மூன்றாம் பத்தாலே கூறி, பகவத் வ்யாப்தி நிறம் பெற்ற வ்யாப்தி என்பதற்காக நியந்த்ருவத்தை நான்காம் பத்தாலே கூறி இவ்வளவும் வர பரத்வத்தை விளக்கினர் - ஐந்தாம் பத்தாலே கூறப்பட்ட காருணிகத்வம் ஸௌலப்ய ப்ரபேதமாகும். ஆக பரத்வ ஸௌலப்யங்களைக் கூறிய ஆழ்வார் ஆறும் பத்தாலே சரண்யனுடைய சரண்யத்வத்தை யறுதியிட்டு சரணாகதி செய்தார் - இவ்வளவும் வர சரமச்லோகத்தின் பூர்வார்த்தாநுஷ்டாநம். பகவான் கீதையில் " மாமேகம் சரணம் வ்ரஜ " என விதித்தான். ஆழ்வார் " உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே " என அநுஷ்டித்தார். இனி உத்தரார்த்தத்தில் "அஹம்" என்ற பதத்தாலே கூறப்பட்ட சக்தி, பூர்த்தி, ப்ராப்தி என்கிற மூன்று கல்யாண குணங்களையும் ஏழு, எட்டு, ஒன்பதாம் பத்துக்களாலே விவரித்தருளினார். "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று கூறப்பட்ட ஆர்த்திஹரத்வத்தைப் பத்தாம் பத்தாலே அருளிச்செய்தார் ஆழ்வார். ஆகத் திருவாய்மொழி கீதார்த்த ப்ரதிபாதகம் என்று தேறியது.

பத்துப் பத்துக்களாலே விவரிக்கப்பட்ட பத்து கல்யாண குணங்களையும், திருவரங்கப் பதிகமான " கங்குலும் பகலும் " பதிகத்தில் ஸங்க்ரஹேண அருளிச்செய்தார் ஆழ்வார் - ஆகவிறே திருவாய்மொழி ஆயிரமும் திருவரங்கத்தைப் பற்றியது என அறுதியிட்டார் ஸ்ரீ பராசரபட்டர். " முழுதுண்டபரபரன் " (1.1.8) " ஆய்நின்றபரன் " (1.1.11) " வளவேழுலகின்முதலாய வானோரிறை (1.5.1) " வைப்பாம் மருந்தாம் ... நலத்தாலுயர்ந்து உயர்ந்து அப்பாலவன் " (1.7.2), "அவையுள் தனிமுதல்" (1.9.1), " உம்பர் வானவராதியஞ் சோதி" (1.10.9), " அயர்வறும் அமரர்கள் அதிபதி " (1.1.1) என்று முதற் பத்திலே பரத்வமும், " சோராத எப்பொருட்கும் ஆதியாம்சோதி " (2.1.11), " மூவாத்தனிமுதலாய்" (2.8.5), " எப்பொருட்கும் வேர்முதலாய் வித்தாய் " (2.8.10), " பொருளென்று இவ்வுலகம் படைத்தவன் " (2.10.11) என்று இரண்டாம் பத்திலே காரணத்வமும், " முழுதுமாய் முழுதியன்றாய் " (3.1.8), " ஏழ்ச்சிக் கேடின்றி யெங்கணும் நிறைந்த வெந்தாய் " (3.2.4), " எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற (3.2.7)", அளவுடை வைம்புலன்கள் அறியாவகையால் அருவாகி நிற்கும்" (3.10.10), " யாவையும் யவரும் தானாய் அவரவர் சமயம்தோறும் தோய்விலன்" (3.4.10) என்று மூன்றும் பத்திலே வ்யாபகத்வமும் வ்யாப்யதோஷாஸம்ஸ்பர்சமும், " மறுகலிலீசனை " (4.1.10), " ஈசன் ஞாலமுண்டுமிழ்ந்த" (4.3.2), " ஈசன்பாலோர் அவம் பறைதல் " (4.10.4), என்று நாலாமபத்திலே நியந்த்ருத்வமும், " ஆஆவென்றருள் செய்து" (5.1.9), " தானே யின்னருள் செய்து" (5.1.10), " கலியுகமொன்றுமின்றிக்கே தன்

Koviloor Digital Library

ளடியார்க்கருள் செய்யும்" (5.2.11), "பெருமானது தொல்லருளே" (5.9.9) என்று ஐந்தாம் பத்திலே காருணிகத்வமும், "திருவிண்ணகர் சேர்ந்தபிரான் வரங்கொள் பாதமல்லாலில்லை யாவர்க்கும் வன்சரணே" (6.3.7), "வன்சரன் சுரர்க்காய்" (6.3.8) என்று ஆறும்பத்திலே சரண்யத்வமும் கூறப்பட்டபடியால் சரமச்லோக பூர்வார்த்தம் வ்யாக்யாதம். "எண்ணிலாப் பெருமாயனே" (7.1.1), "கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்க், குணங்கள் படைத்தளித்துக் கெடுக்கும்" (7.1.11), "பாலதுன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" (7.2.7), ஊழிதோ றூழியுருவும் பேரும் செய்கையும் வேறவன் வையங் காக்கும்" (7.3.11), "மாயா வாமனனே" (7.8.1) என்று ஏழாம் பத்திலே உபாயக்ருத்யத்துக்கு அபேக்ஷிதமான ஸர்வ சக்தித்வமும், "தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமரர் ஆட்செய்வார். மேவியவுலகம் மூன்றவையாட்சி" (8.1.1), "பணியாவமரர் பணிவும் பண்பும் தாமேயாம்" (8.3.6), "நேர்பட்ட நிறை மூவுலகுக்கும் நாயகன்" (8.9.11), "நல்ல கோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும் தான் நிறைந்த" (8.10.11) என்று எட்டாம்பத்திலே ஸத்யகாமத்வமாகிற பூர்த்தியும், எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான்" (9.1.1), அவனே யகல்ஞாலம் படைத்திடந்தான் அவனே அஃது உண்டுமிழ்ந்து அளந்தான்" (9.3.2), "அகலிடம் படைத்து இடந்து உண்டுமிழ்ந்து அளந்து எங்குமளிக்கின்ற வாயன்" (9.9.2), "ஆலில் மேலாலமர்ந்தான்" (9.10.1) என்று ஒன்பதாம் பத்திலே ஆபத்ஸகத்வமும், "சுரிகுழற்கமலக் கட்கனிவாய் காளமேகம் (10.1.1), "அஞ்சனமேனி" (10.3.3), "புனல்மை நின்ற வரைபோலும் திருவுருவம்" (10.6.8)' "பொல்லாக் கனிவாய் தாமரைக்கண் கருமாணிக்கம்" (10.10.1), "புனக்காயாநிறத்த புண்டரீகக் கட்செங்கனிவாய்" (10.10.6), என்று பத்தாம் பத்திலே ஆர்த்திஹரத்வமும் கூறப்பட்டபடியால் சரமச்லோக உத்தரார்த்தம் வ்யாக்யாதம். இப்படி கீதா சரமச்லோக வ்யாக்யானமான திருவாய்மொழி பத்துப் பத்துக்களான ஆயிரம் பாசுரங்களால் கூறப்பட்ட பகவத்கல்யாண குணங்கள் பத்தினையும் திருவரங்கப் பதிகமான "கங்குலும் பகலும்" பதிகத்திலே ஆழ்வார் வெளியிட்டருளினரிறே.

"வடிவுடைவானோர் தலைவனே" (7.2.10) என்று பரத்வமும், "முன்செய்திவ்வுலகம்" (7.2.2), "விண்ணோர்முதல்" (7.2.6), என்று காரணத்வமும், "கட்கிலீ" (7.2.3) "என்னுடையாவி" (7.2.9) என்று வ்யாபகத்வமும், "பாலதுன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" (7.2.7), "காலசக்கரத்தாய்" (7.2.7), "மூவுலகாளி" (7.2.10) என்று நியந்த்ருத்வமும், "இவள் திறத்தருளாய்" (7.2.6), என்று காருணிகத்வமும், "பற்றிலார் பற்ற நின்றனே" (7.2.7) என்று சரண்யத்வமும், "அலைகடல் கடைந்த ஆரமுதே" (7.2.5) என்று சக்தியும், "என்திருமகள்சேர் மார்பனே" (7.2.9) "நிலமகள் கேள்வனே" (7.2.9), "ஆய்மகள் அன்பனே" (7.2.9) என்று ஸத்யகாமத்வமும், "இவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்" (7.2.2) என்று ஆபத்ஸகத்வமும், "முகில் வண்ணன் அடியை அடைந்து அருள்சூடி உய்ந்தவன்" (7.2.11) என்று ஆர்த்திஹரத்வமும் திருவரங்கப் பதிகத்திலே கூறப்பட்டதிறே.

ஆக எல்லாவற்றாலும் "மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ்மறைகள் ஆயிரம்" என்னத்தட்டில்லையிறே.

ஆழ்வார்களில் நம்மாழ்வார் அதிகராளுப் போலே எம்பெருமான்களில் நம்பெருமாள் அதிகராயிறேயிருப்பது.

இப்படி நம்பெருமாளை நம்மாழ்வார் அநுபவித்தபடி நிருபிதம்.

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ
சடகோபன் தண்தமிழ்நூல்வாழ - கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

ஆழ்வார் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.